Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:
ஈஸ்ரன் கிராபிக்ஸ்
திருமலை வீதி
மட்டக்களப்பு.
தொலைபேசி
065-24821

ஒளி - 01 - கதிர் - 216 16-11-2000 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-

# யாழ்குடா நாட்டில் மீண்டும் செல்லடியும், குண்டுவீச்சும் மக்கள் அச்சம்!

(யாழ் நிருபர்)

**யாழ்குடா நாட்டில் பல்வேறு பகுதிகளில் படையினர் தாக்குதல் நடத்திவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றும் குடாநாட்டின் சில பகுதிகளில் விமான குண்டுவீச்சு சத்தங்களும், எறிகணை தாக்குதல் சத்தங்களும் கேட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**யாழ், மட்டுவில், சரசாலை, செம்மணி, கோப்பாய், புத்தூர் பகுதிகளில் நேற்று அதிகாலை படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

வலிகாமம் கிழக்கிற்கும் தென்மராட்சிக்கும் இடையிலான மேற்படி கரையோரப் பிரிதேசத்தை நோக்கி படையினர் பல்குழல் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதல் காரணமாக குடாநாடு அதிர்ந்தது. மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ள நிலையில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மேலும் பல குடும்பங்கள் இடம்பெயரத்தொடங்கியுள்ளன.

எதிர்வரும் 21ம் திகதி தொடக்கம் 26ம் திகதிவரை விடுதலைப் புலிகள் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்துவரும் நிலையில் புலிகள் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

### சோதனை தீவிரம்

இதேவேளை யாழ் பகுதியில் நீக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு சோதனைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. திடீர்சுற்றிவளைப்பு, தேடுதல் போன்ற நடவடிக்கைகளும். விமானக்குண்டு வீச்சும் அதிகரிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

### சுற்றிவளைத்து தேடுதல்

யாழ்குடாநாட்டில் பல இடங்கள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் சமுகத்தை படையினர் பலிக்கடாவாக்க நினைக்கின்றனர்

(மட்டக்களப்பு)

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்திய சிங்கள பேரினவாதம் தனது காரியத்தில் வெல்லலாம் என நினைத்து செயற்படுவதாகவும் இந்த வகையில் தான் படையில் சேர்ந்து விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட முஸ்லிம்கள் முன்வரவேண்டும் எனக் கோரி பல பிரசுரங்கள் துண்டுபிரசுரங்களை வெளியிட்டன.

என எனத் தெரிவித்து முஸ்லிம் சமுகத்தை பலிக்கடாவாக்க முனைய வேண்டாம்மென்று கூறும் ஒரு துண்டுப்பிரசுரத்தை விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு அம்பாறையில் வெயிட்டுள்ளனர்.

முஸ்லீம்கள் தற்காலத்தை நன்கு

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ரெலோவிலிருந்து நால்வர் வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ வேட்பாளராகப் போட்டியிட்ட வரதனும் ரெலோவிலிருந்து நீக்கப்பட்டதாக தலைவர் அடைக்கலநாதன் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதி தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) காரியாலயத்தைச் சேர்ந்த கீழ் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்கள் கடந்த சில காலமாக தலைமைப் பீடத்தின் பல எச்சரிக்கைகளையும் மீறிப் பொதுமக்களுடன் முறைகேடான முறையில் நடந்துகொண்டு அவர்களைப் பயமுறுத்தியும் துன்புறுத்தியும் பொதுமக்களுக்கு இடையிலான உறவை சீர்குலைக்க எத்தனித்துள்ளார்கள். எனவே இவர்கள் தமிழீழ விடுதலை இயக்க அங்கத்தவர் பதவியி லிருந்து

(8ம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளை நகரில் தேடுதல் விசாரணைக்காக 25 பேர் தடுத்து வைப்பு

(நமது நிருபர்)

பண்டாரவளை நகரில் நேற்று பிற்பகல் படையினரால் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தப்பட்டது. பண்டாரவளை நகர பஸ்தரிப்பு நிலையம் பிரதான நகரப்பகுதி என்பவற்றில் தேடுதல் நடத்தப் பட்டது. வெளியூர் களில் இருந்து வாகனங்களில் வந்தவர்களையும் படையினர் இறக்கி விசாரணை செய்தனர். இத்தேடு தலில் அடையாள அட்டைகளை வைத்திருக்காத 25 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் பெண்களாவர்

நேற்று முதல் பிற்பகல் ஒருமணி மாலை 5 மணி வரை நடத்தப்பட்ட இத்தேடுதலில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் பதுளை நகருக்குள் ஊடுருவியிருக்கலாம் எனும் சந்தேகத்தின் பேரிலேயே இத்தேடுதல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடம் பெயர்ந்தோருக்கு நிவாரண நிதி

(மூதூர் அனஸ்)

கடந்த திங்கள் மாலை இடம் பெற்ற எறிகணை வீச்சுக்கு இலக்காகி ஒருவர் மரணமடைந்து வீடும் சேதமடைந்ததைத் தொடர்ந்து அச்சம்பவத்தின் காரணமாக சூடக்குடாப் பகுதியில் இருந்து சுமார் 150 குடும்பங்கள் வெளியேறியுள்ளன. இவ்வாறு வெளியேறி சம்பூர் மத்திய கல்லூரியில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு நேற்று மூதூர் பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவும் சர்வதேச செஞ்சிலுவை சங்கக் குழுவினரால் பாய்கள் . மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன என ஐ.சி.ஆர்.சி. திருமலை மாவட்ட வெளிக்கள அதிகாரி எஸ் புஸ்பராசா தெரிவித்தார்.

## வந்தாறுமூலையில் ஆயுதபாணிகளால் "பிக்கப்" வாகனம் கடத்தல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நிர்மாணத் திணைக் களத்திற்கு சொந்தமான "பிக்கப்" வாகனம் ஒன்று நேற்று வந்தாறு மூலையில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி நிர்மாணத் திணைக்களத்திலிருந்து பொறியியலாளருடன் வாழைச்சே னைக்கு சென்று நிர்மான பணிகளை பார்வையிட்டுவிட்டு திரும்பி வரும் வழியிலேயே மேற்படி வாகனம்

(8ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வெடித்தது தொடர்பாக வரதர் அணி உறுப்பினர் கைது

(அரியம்)

யாழ்ப்பாணத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணி அலுவலகத்தில் இடம் பெற்ற துப்பாக்கி சூடு மரணம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். வரதர் அணி உறுப்பின ரொருவர் பொலிஸாரால் சந்தேகத்தின் பிரகாரம் கைது செய்யப் பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்ப வத்தில் சின்னத்தம்பி நவரட்ணராஜா என்பவர் உயிரிழந்தார்.

இவரது துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாக கூறப்பட்டது. இது தொடர்பான மரண விசாரணைகளை நேற்று யாழ் மாவட்ட நீதிபதியான இ. விக்கின ராஜா முன்னிலையில் நடைபெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர்கள் மூவர் சாட்சியமளித்தனர்.

இம்மரணத்தில் சந்தேகம் இருப்பதாக யாழ்ப்பாண பொறுப்பாளர் தெரிவித்தார்.

இத்னையடுத்து நாகமுத்து நாகேந்திரன் என்ற மற்றுமொரு உறுப்பினர்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பட்டிப்பளை பகுதியில் மின்சாரம் தாக்கி இருவர் பலி

(அரியம)

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று 2 வெவ்வேறு இடங்களில் மின்சாரம் தாக்கியதில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக்காலை கொக்கட்டிச் சோலையில் தனது வீட்டிற்கு பின்

(8ம் பக்கம் பார்க்க)


## பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் இலங்கை வருகின்றார். தமிழ் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பீற்றர்கெய்ம் எதிர்வரும் 21ம் திகதி இலங்கை வருகின்றார். இலங்கை வரும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க. வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உட்பட பலருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள் ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை தமிழ் கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார். என எதிர்பார்க்கப்படுகின்றது. இவரது இலங்கை விஜயத்தின் போது நோர்வே அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் பற்றியும் ஆராயவிருப்பதாகவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

### வக்கணை




நோர்வேயை எதிர்த்து
சிஹலஉறுமய இன்று
கொழும்பில் ஆர்ப்பாட்டமாம்
அது சரி அவங்கள் தாற
உதவியை நிறுத்திட்டா எங்க
ஆர்ப்பாட்டம் செய்வாங்க.....?

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## இது ஒரு புதுக்கதை!

ஒரு தகப்பனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இருவரும் ஆண் பிள்ளைகள். தகப்பன் சாகும் போது இருமகன்களையும் அழைத்து என்னிடமுள்ள போர்வை, வளவில் கட்டிவிட்டிருக்கும் பசுமாடு, வீட்டின் பின் புறமிருக்கும் தென்னை மரம் ஆகியவைதான் நான் தேடி வைத்திருக்கும் சொத்துக்கள் இவற்றை நான் செத்த பின் சண்டைபிடிக்காமல் சமமாக உபயோகித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு செத்துப்போனார்.

அண்ணன் தம்பியைக் கூப்பிட்டு நீ பகலில் போர்வையை வைத்துக்கொள் அதை இரவில் நான் பாவிக்கிறேன், பசு மாட்டின் முன்பக்கம் உனக்கு உரியது பின்புறம் எனக்கு இதே போல் தென்னை மரத்தின் அடிப்பாகம் உனக்கு மேல் பாகம். எனக்கு என்று பாகம் பிரித்துச் சொன்னார்.

இது ஒரு நாட்டுப்புறக்கதை இந்தக் கதையை 1978 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த அமிர்தலிங்கமும் பாராளுமன்றத்தில் சொன்னார் .

இந்த சமயத்தில் சபையில் இருந்த அமைச்சர் காமினி திசாநாயக்கா குறுக்கிட்டு இந்த இரண்டு சகோதரர்களும் வட இலங்கையைச் சேர்ந்தவர்களா ? என்று கேட்டார் .

இதற்கு, இல்லை அண்ணன் தென்னிலங்கையையும் தம்பி வட இலங்கையையும் சேர்ந்தவர்கள் என்று அமிர்தலிங்கம் பதிலளித்து தமிழர்கள் இங்கு சிங்களச் சகோதரர்களால் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை இரத்தினச் சுருக்கமாக இக்கதை மூலம் எடுத்துக்காட்டினார்.

பகலில் போர்வையை பத்திரப்படுத்தி வைப்பது தம்பி இரவில் போர்வையைப் போர்த்திப்படுப்பது அண்ணன், மாட்டுக்கு உணவு வைப்பது தம்பி மாட்டில் பால் கறந்து அனுபவிப்பது அண்ணன், மரத்துக்கு நீர் பாய்ச்சுவது தம்பி மரத்தில் இளநீர் தேங்காய் பறித்து அனுபவிப்பது அண்ணன்.

இந்த அநியாயத்தை எவ்வளவு காலந்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும். ஒரு நாள் மாலை வேளையில் போர்வையை எடுத்து தண்ணீருக்குள் அமிழ்த்தி வைத்துவிட்டார் தம்பி என்று அமிர்தலிங்கம் கதையை விபரமாக கூறினார்.

இந்தக் கதை பழைய கிராமியக்கதை இதில் இப்பொழுது புதிதாக நாமும் ஒரு பகுதியைச் சேர்த்து புதுக்கதை சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறோம்.

தம்பி பொறுமை இழந்து எடுத்த நடவடிக்கை சுகம் அனுபவித்துவந்த அண்ணனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அயலிலும் தூரத்திலுமுள்ளவர்களிடம் அண்ணன் போய் தம்பி எனக்குப் பெரும் அநியாயம் செய்கிறான் என்னை அண்ணன் என்றும் பாராமல் அடிக்கிறான். வீட்டுக்கே நெருப்பு வைக்கப் பார்க்கிறான். நீங்கள் தான் எனக்கு உதவிசெய்து காப்பாற்ற வேண்டுமென்று முறையிட்டார். அவர்களும் இதை உண்மையென்று நம்பி அண்ணனுக்கு உதவிசெய்தனர்.

பக்கத்து வீட்டுக்காரரை முதலில் அண்ணன் முழுதாக நம்பவில்லை. அண்ணன் மற்றவர்களின் உதவியைப்பெற்று தம்பியை அடித்து உதைத்து துன்புறுத்தினான்.

பக்கத்து வீட்டுக்காரனுக்குத்தான் உண்மைதெரியுமே அவன் நம்மைப்பாதுகாப்பான் என்று தம்பி முழுமையாக நம்பிக்கொண்டிருந்தான். அண்ணன் ஆத்திரத்துடன் அடிக்க ஓடி வரும் போது இடையிடையே பக்கத்து வீட்டுக்கு தம்பி ஓடிப்போய் அடைக்கலம் கேட்பான்.

''நான் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வேன் '' என்று பக்கத்து வீட்டுக்காரன் அடிக்கடி சொன்னதையும் தம்பி நம்பினான்.


ஆனால் அண்ணன் தனது சாமர்த்தியத்தினால் பக்கத்து வீட்டுக்காரனுக்கும் இல்லாததை சொன்னதுடன் தம்பி உன்னுடைய வீட்டுக்குள்ளும் நுழைந்து உனது சொத்துக்களையும் சூறையாடி உனது தம்பி மாரையும் உனக்கெதிராகத் தூண்டிவிட்டு மோசம் செய்யப்பார்க்கிறான் என்று ஓதினான்.

பக்கத்து வீட்டுக்காரன் மனிதாபிமானத்தை மறந்தான் அண்ணனுக்கு என்ன வெல்லாம் தரமுடியுமோ அதை யெல்லாம் தந்தான். தம்பிக்கு எதிராக எதையெல்லாம், செய்யமுடியுமோ அதையெல்லாம் கொடுத்து உதவத்தயாராகிவிட்டான் இதுதான் மனிதாபிமானம்.

தம்பிக்கு பக்கத்து வீட்டுக்காரன் துரோகியாக மாறிவிட்டான்

# சாண்டோ ஸ்ரீதாஸ் நிகழ்த்திய புதிய உலக சாதனை

சென்ற சனிக்கிழமை ஆசிரியர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சாண்டோ வே. ஸ்ரீதாஸ் மிக அற்புதமான புதியதொரு உலக சாதனையை நிலைநாட்டி எமது மண்ணுக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.



இரண்டு தடவைகள் உழவு இயந்திரமொன்று அவர் உடல் மீதேறிச் செல்கின்றது. மூன்றாவது முறையாகவும் அவர் உடல் மீதேறுகின்ற உழவு இயந்திரம் அவர் மேல் நிறுத்தி வைக்கப்படுகின்றது. அதன் பின்பு சாண்டோ இரும்புக் கம்பியை பற்களால் கடித்து வளைக்கின்றார். தன் பிடரியில் வைத்து இரும்புக் கம்பியை வளைக்கின்றார். மூன்றாவதாக உடலில் பிணைத்துள்ள இரும்புச் சங்கிலியை அறுத்தெறிகின்றார். இந்த வீர தீரச் செயல்கள் முடிந்த பின்பு இரண்டு போத்தல்கள் பானத்தை அருந்தி ஒரு சிகரட்டையும் புகைத்துக் காட்டினார்.

இவ்வளவு நிகழ்வுகளும் அவர் உடல் மீது உழவு இயந்திரம் ஏற்றப்பட்டிருக்கின்ற பொழுதே நடைபெற்றது. இத்தனைக்கும் 5 நிமிடம், $33\frac{1}{2}$ செக்கன் நேரம் எடுத்திருக்கின்றது.

இவ்விதமானதொரு புதிய சாதனை இது வரையில் எந்தவொரு சாண்டோ கலைஞனாலும் செய்யப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் பாரமான பொருளொன்று உடல் மீது ஏற்றப்படுகின்ற போது தன்னால் மூச்சுவிட முடியும் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே தான் அவர் சோடா பானத்தை அருந்தி, சிகரட்டையும் புகைத்துக் காட்டினார்.

**வே. தவராசா**

இதற்கு முன்பு அதே மைதானத்தில் தொடர்ச்சியாக 36 தடவைகள் உழவு இயந்திரத்தை தன்னுடல் மீதேற்றி புதிய சாதனையைப் படைத்திருந்தார். அதைத் தொடர்ந்து மேலும் மேலே கூறப்பட்ட சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

அப்போது அந்த நிகழ்வுகளைப் பார்த்து வியப்படைந்த எம்.எஸ்.எப்.அதிகாரியான ரஷ்ய நாட்டைச் சேர்ந்த வெள்ளைக்கார அன்பர் மேடைக்கு வந்து சாண்டோ அவர்களைப் பாராட்டியதோடல்லாமல் "மனித மலை" என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்திருந்தார்

54 ஆண்டுகள் வயது நிரம்பப் பெற்ற திரு வே.ஸ்ரீதாஸ் மட்டக்களப்பு, நாவற்குடா வேல் முருகு தம்பதியினரின் புதல்வர்.

சிறு வயது முதல் இரும்பன் என்ற பெயரைப் பெற்ற பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் அவர்களிடம் சாண்டோக் கலையை முறையாகப் பயின்றார்.

பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் சாண்டோ வே.ஸ்ரீதாஸ் அவர்களின் உறவினர் மட்டுமல்ல அதே பகுதியையும் சேர்ந்தவர்.

பல நாடுகட்குச் சென்று வீர தீரச் செயல்களைச் செய்து காட்டி இலங்கைத் திருநாட்டிற்குப் புகழைத் தேடிக் கொடுத்தவர்.

இந்தியா சென்று புதுடெல்லியில் மகாத்மா காந்தியடிகள் முன்னிலையிலே தன்னைப் பிணைத்திருந்த யானை கட்டும் சங்கிலியை அறுத்தெறிந்து சாதனை படைத்தவர். மகாத்மா காந்தியடிகள் அவரது சாதனையை வியந்து பாராட்டியதோடல்லாமல் இப்படி வல்லமை பொருந்திய வீரர்கள் இருப்பதனால் பாரத நாட்டைப் பிணைத்திருக்கின்ற அடிமைச் சங்கிலி மிக விரைவில் அறுத்தெறியப்பட்டு விடும்'' என்றும் கூறினார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மைசூர் மன்னர் முன்னிலையிலே அரியதொரு சாதனையைப் புரிந்ததனால் பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் அவர்களைப்பாராட்டி செங்கோல் ஒன்றையும் அந்த மைசூர் மகாராஜா பரிசளித்துக் கௌரவித்தார்.

வல்வெட்டித் துறையிலே தமிழர்களால் கட்டப்பட்ட அன்னபூரணி என்ற கப்பலை அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர் விலைக்கு வாங்கியிருந்தார். அந்தக் கப்பலை அமெரிக்க நாட்டிற்குக் கொண்டு செல்வதற்காக அந்த அமெரிக்கர் தேர்ந்தெடுத்த வல்லவன் அமரரர் சாண்டோ சங்கரதாஸ்.

இந்த வகையிலே இலங்கை மாதாவிற்கு புகழணி சேர்த்த அந்த மைந்தன் பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் அவர்கட்கு இன்று வரையில் இலங்கை ஓர் துளியளவில் கூட கௌரவம் செலுத்தவில்லை என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்தேயாக வேண்டும். இத்தனைக்கும் அவர் ஒரு தமிழராகப் பிறந்தது தான் காரணமோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

ஆனால் தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவரை அழைத்து கௌரவித்து பேராசிரியர் என்ற பதவியையும் வழங்கியதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையிலே தான் தன் குருவுக்கு நினைவு மண்டபம் ஒன்றை ஸ்தாபிக்கும் நோக்கோடு அதற்கான ஓர் ஆரம்ப நிதியைப் பெற்றுக்கொள்ளவே ஆசிரியர் கல்லூரி மைதானத்தில் சாண்டோ மனிதமலை வே.ஸ்ரீதாஸ் இப்புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

சாண்டோ ஸ்ரீதாஸ் இது வரையில் 100ற்கு மேற்பட்ட சாண்டோ நிகழ்ச்சிகளைக் காண்பித்து, அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நிதியை பல பொது ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காக அன்பளிப்புச் செய்துள்ளார்.

சாண்டோ வே.ஸ்ரீதாஸ் அவர்களின் அற்புதமான சாதனைகளை பல பொது ஸ்தாபனங்கள் பாராட்டியதோடு மட்டுமல்லாமல் பல விதமான விருதுகளையும் வழங்கிக் கௌரவித்துமுள்ளார்கள். வீரதீரத்திலகம், நவீன கடோற்கஜன், சிங்கக்குருளை, பராக்கிரமன், இரும்புமனிதன், மனித மலை போன்ற இன்னோரன்ன பட்டங்களை இவருக்குச் சூட்டியுள்ளார்கள்.

இந்தப் புதிய உலக சாதனையை நிலை நாட்டிய பின்பு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி அவையினர் 'மாமல்ல வீரர்' என்ற கௌரவத்தை வழங்கிப் பெருமைப்பட்டார்கள்.

உலக சாதனையை நிலை நாட்டி அதன் மூலம் "கின்னஸ்" ஏட்டில் தன் பெயரைப் பொறித்துக் கொள்ள இவர் பல முறை முயற்சிகளை மேற்கொண்டார். சென்ற அரசாங்கத்தில் விளையாட்டுத் துறை உதவி அமைச்சராக விருந்த ஜீவன் குமாரதுங்க உலக சாதனைக்குப் பொறுப்பான இலங்கை அமைப்பிற்கு சாண்டோ ஸ்ரீதாஸ் அவர்களைச் சிபாரிசு செய்திருந்தார். ஆனால் இன்று வரை அந்தக் குழு இதற்கான எந்த நடவடிக்கையையுமே மேற்கொள்ளவில்லையென்பது வேதனைக்குரியதாகும்.

இப்படியானதொரு வேளையிலே தான் சாண்டோ ஸ்ரீதாஸ் இப்புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். இனிமேலாவது இவர்மேல் கரிசனை எடுக்க அரசாங்கம் முயல வேண்டும். இவர் இந்த நாட்டிற்கு புகழ் சேர்க்கும் வல்லமை பொருந்தியவர். இவர் இந்த நாட்டின் தேசியச் சொத்து. அரசினால் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவர். இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் நோக்கப்பட வேண்டிய திறமைசாலி.

இவர் நிலை நாட்டிய இந்த உலக சாதனையை உலகறிய வைக்க வேண்டிய பொறுப்பு அரசைச் சேர்ந்த விடயமாகும். இவரது பெயர் "கின்னஸ்" ஏட்டில் இடம்பெற வைக்க வேண்டிய மா பெரும் பொறுப்பு அரசின் முன்னாலுள்ள பெரிய பணியாகும்.

# அமெரிக்க அதிபர் தெரிவில் தொடரும் சிக்கல். கையால் எண்ணப்படக் கூடாது என்று மனு தாக்கல்

(வாஷிங்டன்)

புளோரிடா மாநிலத்தில் 4 தொகுதிகளில் வாக்குகள் கைகளால் மறு எண்ணிக்கை செய்யப்பட வேண்டும் என்று ஜனநாயக கட்சியினர் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். செவ்வாய் அன்று நடந்த அதிபர் தேர்தலில் தமது வேட்பாளர் அல்கோருக்கு கிடைத்த முக்கியமான வாக்குகளை பதிவு செய்யும் இயந்திரம் பதிவு செய்யவில்லை என கருதுகின்றனர்.

நலம்பீச் என்னும் இடத்தில் கைகளால் எண்ணப்பட்ட ஒரு தொகுதி வாக்குகளின் முடிவு வெளியாகியிருக்கின்றன. அதில் முன்னர் அல்கோருக்கு கிடைத்த வாக்குகளை விட 19 வாக்குகள் கூடுதலாக கிடைத்திருக்கின்றது. இந்த தொகுதியை வைத்துப் பார்க்கும் போது மொத்தம் 900 வாக்குகள் கூடுதலாக பெறுவதகாகின்றது.

புளோரிடா மாநிலத்தில் முன்னர் எண்ணப்பட்ட அதிகாரப் பூர்வமான வாக்குகளில் கிட்டத்தட்ட 300 வாக்குகள் மட்டுமே புஸ் அதிகமாக பெற்றிருந்தார். இதை எடுத்துக் கொண்டால் தற்போதைய முடிவு குறித்து ஜனநாயக கட்சியினர் ஏன் இவ்வளவு பரபரப்பு அடைந்திருக்கின்றார்கள் என்பது புரியும்.

ஆனால் குடியரசு கட்சியினர் அம்முடிவை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் அதனால் வாக்கு மீண்டும் எண்ணப்படுவதை தடுக்க வேண்டும் என்று கோரி அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள்.

வாக்குகள் கைகளால் எண்ணப்படும்போது மனித தவறுகள் ஏற்படவும் சில தீங்கு விளைவிக்கவும் வாய்ப்பு இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள்.




புளோரிடா மாநில தேர்தல் முடிவைப் போன்று முக்கியம் வாய்ந்தது வேறு ஒன்று இருக்க முடியாது. யார் புளோரிடா மாநிலத்தில் கூடுதல் வாக்குகளைப் பெறுகின்றார்களோ அவர்தான் வெள்ளை மாளிகைக்கு செல்ல கூடியவர் என்பது இருதரப்பினருக்கும் தெரிந்த விடயம்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## முதன் முதலாக அமெரிக்க அதிபர் வியட்நாமுக்கு பயணம்!

(புருணை)

ஆசிய பசுபிக் பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் வகையில் ஜனாதிபதி கிளிண்டன் புருணை பயணமானார். நாளையும் நாளை மறுதினமும் இதில் கலந்து கொள்ளும் பில் கிளிண்டன் ரஷ்யா தென் கொரியா ஜப்பான், சீன ஆகிய நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து தனித் தனியாக உரையாடவுள்ளார்.

உச்சி மாநாட்டைத் தொடர்ந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு அவர் வியட்நாம் பயணமாகவுள்ளார். மேலும் வியட்நாமுடன் தமது உறவுகளை விருத்தி செய்து கொள்ளப்போவதாகவும், அதே சமயம் அமெரிக்க வியட்நாம் யுத்தத்தின் போது காணாமல் போன அமெரிக்க வீரர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கு கூடுதலான கவனம் எடுக்கப்படும என்றும் அவர் கூறினார். வியட்நாம் யுத்தத்தின் போது 53 ஆயிரத்துக்கு அதிகமான அமெரிக்க துருப்புக்களும் 15 லட்ச வியட்நாமியர்களும் கொல்லப்பட்டனர். இந்த இரு நாடுகளுக்கிடையிலான யுத்தம் 1975 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. இதேவேளை வியடநாமுக்கு விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் கடத்தலை தவிர்க்க இராணுவ நடவடிக்கை

(பாக்தாத்)

ஈராக் தனது கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைகளில் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளது.

இவ்விரு நாடுகளிலுமிருந்து ஈரானுக்கு போதைப்பொருள் கடத்தப்பட்டு வருவதாகவும் மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதையும் கண்டித்தோ இந்த எல்லைகளில் பாதுகாப்பு பலப் படுத்தபட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இச்சம்பவம் குறித்து ஈரானிய பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட பாதுகாப்பு பலப்படுத்தல் தீர்மானத்தின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## இரண்டு பிரமிட்டுக்கள் கண்டுபிடிப்பு!

(கெய்ரோ)

எகிப்தின் இஸ்லாமியப் பகுதியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த இரண்டு பிரமிட்டுக்கள் குறித்து கேம் பிரிச் பல்கலைக்கழகத்தினர் ஆராய்ந்து வருகின்றனர். ஒரு சிலர் இப்பிரமிட்டுக்கள் 4500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் இன்னும் சிலர் இவை 100 ஆண்டுகள் மட்டுமே பழமை வாய்ந்தது என்றும் கூறி வருகின்றனர்.

இதை முன்னிட்டே இப்பிரமிட்டுக்கள் எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த பிரமிட்டுக்களின் இரண்டு கண்களிலும் துளைகள் ஏற்பட்டிருப்பதாகவும் இவைகள் பழைய காலத்து எகிப்திய நடிகர்களின் சாயலை ஒத்தவையாக செய்யப்பட்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## அப்பாவி பாலஸ்தீனியர் மீது இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்தும் தாக்குதல்

(ஜெருஸலம்)

மேற்கு கரையோரப் பகுதிகளை இஸ்ரேலியத் துருப்பினர்கள் சுற்றி வளைத்ததை தொடர்ந்து மேற்குகரை நகரான ரமல்லாவில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் இரண்டு பாலஸ்தீனியர் கொல்லப பட்டுள்ளதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு இலக்கானவர்கள் யஸீர் அரபாத்தின் வதாஹ் பிரிவின் அங்கத்தவர்கள் என பாலஸ்தீன அதிகாரிக்ள தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் மேற்கு கரையிலும் ஜெருசலேமின் ஏனைய பகுதிகளிலும் தொடரும் வன்முறைகளில் ஒன்பது பாலஸ்தீனர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எப்டு வாரங்களுக்கு மேலாக தொடரும் இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்களில் வன்முறைகளில் கொல்லப்பட்டவர்களின் தொகை கிட்டத்தட்ட 214ற்கும் ஆக மேலாக உயர்ந்துள்ளது.

அதேநேரம் பாலஸ்தீனியர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதையடுத்தே மேற்கூறியவாறு இஸ்ரேல் துருப்பினர் மேற்கு கரைப்பகுதியை சுற்றி வளைத்திருந்தனர். பாலஸ்தீனர் இஸ்ரேலியர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்திற்கு பதிலடி கொடுப்பதற்காகவே நாம் பீரங்கித் தாக்குதலை குடியிருப்புக்கள் மீதுமேற்கொண்டதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்கு கரையின் ஜெரிக்கோ நேப்லஸ் நகர்ப் பகுதிகளில் மோதல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு சிறுவர்கள், நான்கு பாலஸ்தீனர்கள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அதேவேளை காயா பள்ளத்தாக்குப் பகுதியில் இரண்டு பாலஸ்தீனர்களை தாம் சுட்டுக் கொன்றுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

இதே சமயம் இஸ்ரேலிய இராணுவம் அப்பாவி பாலஸ்தீன பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதாக அரபு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. அரபாத் கட்டாரில் நடைபெற்ற அரபு நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பாலஸ்தீனர்களின் பொருளாதாரத்தை உயர்ந்த உதவி செய்யும்படி உருக்கமாக கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து அரபு நாடுகள் உதவ முன்வந்துள்ளதகவும் தெரிவிக்கப்படுகிறது.




மேற்குக் கரை ரமல்லா நகரில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பாலஸ்தீன உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது அக்கட்டிடத்துக்கு வெளியே பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டிருந்தனர்.

## குதுப்மினாரை தகர்க்க கோரி ஆர்ப்பாட்டம்!

(புதுடில்லி)

புதுடில்லியில் அமைந்துள்ள முஸ்லிம்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குதுப் மினார் கட்டிடத் தொகுதியை தகர்க்க கோரி சுமார் 800 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். விஸ்வ இந்துபரிஸத் மற்றும் அடிப்படைவாத குழுவே இதனை ஏற்பாடு செய்திருந்தது. இந்த கட்டிடம் அமைக்கப்படுவதற்கு முன்னர் இங்கு பல இந்து கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்றும் எனவே குதுப் மினார் கட்டிடத் தொகுதி முழுமையாக உடைக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை தற்போது இந்தியப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் குறித்து இந்திய மத்திய அரசாங்கம் விசாரணை நடத்தி வருகிறது.

## சுஹார்ட்டோ வீட்டில் பொலிஸார் சோதனை

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவின் வீட்டினை பொலிஸார் இரண்டாவது தடவையாகவும் சோதனையிட்டுள்ளனர்.

லஞ்ச ஊழல் குற்றச் சாட்டில் தொடர்புடைய சுஹாட்டோவின் இளைய மகனை கைது செய்வதற்கே தாங்கள் முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்குச் சென்றதாகவும் இரண்டு மணிநேரம் சோதனை நடத்திய போதிலும் எதுவித ஆவணமும் கிடைக்கவில்லையென்றும் இளைய மகனையும் காணவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுஹாட்டோவின் இளைய மகனான டொமிபூத்திரா கடந்த ஒரு வாரமாக மறைந்திருப்பதாகவும் அது சம்பந்தமாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அதே சமயம் சுஹாட்டோவின் மற்றைய மகள்மாரின் வீட்டிலும் சோதனைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவித்தனர்.

## அதிகளவில் பெண்கள் மதுபானம் குடிக்கின்றனர்.

(லண்டன்)

பிரிட்டனில் அதிகளவான பெண்கள் மதுபானம் அருந்துவதாக ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 வருடமாக நடத்தப்பட்ட ஆய்வில் சுமார் 50 வீதமான பிரிட்டன் பெண்கள் மதுபானப்பாவணையில் ஈடுபட்டிருப்பதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் லாகர் மற்றும் பியர் போன்ற மதுபானங்களை பாவிப்பதாகவும் வாரத்துக்கு மூன்று முறை மூன்றலகு வைனையும் பாவிப்பதாக கூறிய அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே மதுபானம் பாவிப்பதில் அதிக நாட்டம் கொண்டவர்களாக இருப்பதாக இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

## ஹிலாரி இந்தியா செல்வார்

(வாஷிங்டன்)

ஜனாதிபதி கிளின்டனின் மனைவியும் இப்போது செனட்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஹிலாரி கிளின்டன் விரைவில் இந்தியாவுக்கு வருகை தாவிருக்கிறார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தொலைபேசியில் திருமதி ஹிலாரிக்கு அவரது தேதுர்தல் வெற்றிக்குப் பாராட்டுத் தெரிவித்த போதே தாம் இந்தியாவுக்கு வர விருப்பது பற்றி அவர் தெரிவித்தார்.

உலகியல் கல்வியோடு மதக்கல்வியும் போதிக்கப்பட வேண்டும்.

# பரிசளிப்பு விழாவில் பேச்சு

(கல்முனை மத்திய நிருபர் ஜெஸ்மி)

கல்வி என்பது ஒரு சமூகத்தின் வழிநடத்தலுக்கு அவசியமானது. அது வெறுமனே ஒரு வைத்தியரையோ அல்லது பொறியியலாளரையோ அல்லது சட்டத்தரணியையோ உருவாக்குவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. இவர்களை சமூகம் மதிக்கத்தக்க விதத்தில் மாற்றுவதுடன் இவர்களின் கல்வியும் சமூக விடயங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் அக்கல்வி தனது இலக்கை அடைந்ததாக கொள்ளப்படும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மருதமுனை மக்கள் மண்டபத்தில் ஈஸ்ரன் யூத் விளையாட்டுக்கழகத்தின் 20வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற 2000ம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களையும். இம்முறை புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த 54 மாணவர்களையும் கற்பித்த பாடசாலை அதிபர். ஆசிரியர்களையும் பாராட்டிப் பரிசளிக்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட சட்டத்தரணி ஏ.எம். பதுறுதீன் தமது உரையில் தெரிவித்தார்.

மேலும் அவர் தமதுரையில் உலகியல் கல்வியின் மூலம் மட்டும் சமூகத்தில் நற்பிரஜைகளையும் பண்பாளர்களையும் உருவாக்க முடியாது. நிச்சயமாக மதக்கல்வி நேர்த்தியான முறையில் மாணவர்கள் மத்தியில் போதிக்கப்படும் போதே இவ்விலக்கை நாம் அடைந்துகொள்ள முடியும். புதிய கல்விச் சீர்திருத்தத் திற்கிணங்க தொழிற்கல்வியில் மாணவர்கள் அதீத சிரத்தை எடுப்பதும் முக்கியம்.

மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி எச்.எல். ஜமால்டீன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிப் பீடாதிபதி ஏ.ஆர்.ஏ. அஸீஸ் பிரதம அதிதியாகவும், காத்தான்குடி தேசிய பாடசாலை அதிபர் எம்.எச்.காதர் இப்றாஹீம், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் ஆகியோர் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டு உரையாற்றினார். பெருந்திரளான கல்வியாளர்களும், பொது மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வேலை வாய்ப்பு முயற்சிக் கருத்தரங்கு!

(அட்டாளச்சேனை நிருபர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில்

குறிப்பிட்ட 500 பாடசாலைகளைத் தெரிவுசெய்து. பாடசாலைக் கல்வியைக் கற்றுமுடித்து விட்டு தற்போது வேலைவாய்ப்பை தேடிக்கொண்டிருக்கும் இளைஞர் களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி ஒன்றினை 2000. 11. 06ந் திகதி திங்கட்கிழமை அட்டாளச்சேனை தேசிய பாடசாலையில் "பாடசாலையில் இருந்து வேலை யுலகிற்கு தொழில் வழிகாட்டல் வாரம் நவம்பர் 06 12" என்னும் தொனிப்பொருளின் கீழ் மாவட்ட இளைஞர் சேவைப்பொறுப்பதிகாரி எஸ். எம். ஏ. காதர் தலைமையில்

நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் தேசிய பாடசாலை அதிபர் பீ.எம். எம்.ஏ. காதூர். அட்டாளச்சேனை இளைஞர் சேவையதிகாரி முபாறக் அலி மற்றும் பல இளைஞர் சேவை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். 200க்கும் அதிகமான இளைஞர்கள் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் கலந்துகொண்டோருக்கு "தொழில் வழிகாட்டல்" கைநூல் ஒன்றும் இலவசமாக வழங்கப்பட்டது.

# அரச நிறுவனங்கள் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(ஓட்டமாவடி நிருபர்)

அரச திணைக்களங்களிலும், உயர் நிறுவனங்களிலும் கடமையாற்றுகின்ற ஊழியர்கள், அதிகாரிகள் குற்றமிழைக்கும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் கடமை நேரங்களில் பொதுமக்களின் தேவைகளை கேட்டறிந்து, அவர்களது விடயங்களை உரிய வழிமுறைகளை கையாண்டு நிறைவு செய்து கொடுப்பதோடு, போதியளவு ஆலோசனைகளை யும் வழங்க வேண்டும்.

இந்த வகையில் அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளுக்கான பொறுப்புக்களை ஏற்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டியது அவசியமாகும்.

இது தொடர்பில், பொது மக்களுக்கு கூடுதலான நன்மையளிக்கக் கூடிய விதத்தில் பொது நிருவாகத் துறையில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, அரச ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம், அவர்களின் பதவி உயர்வு, என்பன சீராக நடைபெறுவதற்கு விஷேட குழுவொன்றும் அமைக்கப்பட உள்ளது.

எதிர்காலத்தில் இந்தக் குழுவின் மூலமும் அரச ஊழியர்களின் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதோடு இவர்களது சிபாரிசும் பெறப்படவிருக்கின்றது.

இதேவேளை, அரச ஊழியர்களின் சேவையில் திருப்தியடையாமல், மக்களினல் செய்யப்படும் முறைப்பாடுகள் யாவும் கவனமாக பரிசீலிக்கப்பட்டு குற்றம் காணும் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு

# கௌரவம்

(மருதமுனை நஜிருபர் எம்.ஐ.எம்.வலீத்)

அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தின் அங்கத்தவர்களான ஏ.எம். அலிக்கான் ஐ.எல.எம்.றிசான் ஆகியோர் எதிர்வரும் (19.11.2000) ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கரையோர செய்தியாளர் சங்கத் தலைவர் மீரா எஸ். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபத்தில் பிரதம அதிதியாக கல்வி பிரதி அமைச்சரும், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.அதாவுல்லா கலந்து கொள்வார் என சங்கத்தின் பதில் செயலாளர் ஏ.எல்.றபீக் பிர் தௌஸ் 'தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

அன்றைய தினம் பி.ப 2.30 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன் புதிய நிர்வாகிகளும் அன்றைய தினம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# போதைப்பொருள் ஒழிப்புத்திட்டம்

(அட்டாளச்சேனை நிருபர்)

போதைப் பொருள் பாவனையில் தினமும் பல்லாயிரக் கணக்கானோர் மரணம் அடைவதுடன் பலதரப்பட்ட நோய்களையும் எதிர்நோக்குகின்றனர். இதன் அடிப்படையில் மக்களிடையே போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்வதும் போதைப்பொருள் பாவனையில் மக்களை ஈடுபடுத்தாமல் இருப்பதும் என்னும் கருத்துக்கு அமைவாக "போதைப்பொருள் ஒழிப்புத்திட்டம்" எனும் தலைப்பின் கீழ் அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் யு. எல். கே. அஸீஸ் தலைமையில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது இக்கருத்தரங்குக்கு கிராமசேவகர் பிரிவு அடிப்படையில் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மிலேனியம் சாரணர் விருது – 2000

அண்மையில் அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணிய அமைப்பினால் கமு/சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 3 நாள் பயிற்சிப் பாசறை நடந்தேறியது.இதில்.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலை காரைதீவு சண்முகா வித்தியாலயம். கல்முனை அல்-மிஸ்பா வித்தியாலயம். சாய்ந்தமருது மல்-ஹறுஸம்ஸ் வித்.சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்.. கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை. மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் வித்.. பாலமுனை மின்ஹாஜ் வித்.. கல்முனை காமேல் பாத்திமா தேசிய பாடசாலை, பாண்டிருப்பு மகா வித்.. மருதமுனை சம்ஸ் வித்.. மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலை, நிந்தவூர் கமரா வித்.. நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை. போன்ற பாடசாலை சாரண குழுக்கள் கலந்து கொண்டன "மிலேனியம் சாரணர் விருது-2000" யை பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம் தட்டிக் கொண்டது. விருதினை உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஏ.எல்.எம்.மஜீ (அதிபர்), எம்.ஐ.எம். முஸ்தபா (விரிவுரையாளர்) வழங்கினார் மாவட்ட சாரணிய தலைவர் ஜலீல். பத்திரிகையாளர் றபீக் பிர்தௌஸ் போன்றோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

# எமது இலக்கை அடைந்து விட்டோம்

**அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா**

(கல்முனை மத்திய நிருபர் ஜெஸ்மி)

எந்த நோக்கை, இலக்கை அடைவதற்கு கட்சி உருவாக்கப்பட்டதோ அந்த இலக்குகளில் பலவற்றை நாம் அடைந்து விட்டோம். இன்னும் நமது சமூகத்தின் ஒற்றுமைக்காக விடிவுக்காக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியவர்களாகவுள்ளோம். மறைந்த தலைவர் எம்.எச். எம்.அஷ்ரப் அவர்கள் எமது பிரதிநிதித்துவம் காக்கப்பட வேண்டும். என்பதற்காக பெரும் போராட்டத்தை நடத்தினார். அவரின் எண்ணம் திகாமடுல்ல மாவட்டத்தில் மூன்று முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வெல்லுவதே. அவரின் கனவை தமது இலட்சியத்தை திகாமடுல்ல மாவட்ட வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் கடந்த 10ம் திகதி மெய்படுத்தியுள்ளீர்கள்.

நமது போராட்டத்தில் நீங்கள் அனைவரும் சங்கமமாகி விட்டீர்கள். நமக்குள் ஊர்,பிரதே வேறுபாடில்லை. நமது தாய்மார்கள் சகோதரிகள் தேர்தலின் போது எமது கட்சி வளர்ச்சிக்காகக் காட்டிய ஆர்வத்தை நாம் பாராட்டுகிறோம். நம்மை நசுக்க நினைக்கும் பிற்போக்கு சக்திகளுக்கு இது பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளது. இந்த ஐக்கியமும் பலமும் என்றும் காக்கப்பட வேண்டும்.

தலைவரின் வேண்டுகோளிற்கேற்ப ஏனைய 2 பிரதிநிதிகளும் எனக்கு வாக்களித்தமைக்கு உங்கள் அனைவருக்கும் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

இவ்வாறு திகாமடுல்ல தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்தவிசாளரும், கல்வி அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

(மருதமுனை நிருபர்)

மருதமுனை இளைஞர் கழகத்தின் சம்மேளத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இளைஞர் கழக சம்மேளத்தின் தலைவரும் கோல்ட் மைண்ட் இளைஞர் கழக செயலாளருமான எம்.ஐ.எம். வலீத் தலைமையில் நேற்று மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி பதியுதீன் மஷுமூத் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனைப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.ரி.எம் ஹாறுன் உட்பட இளைஞர் சேவை மன்ற செயற்பாடுகளில் அனுபவம் மிக்க பலரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு 16 க்கு மேற்பட்ட இளைஞர் கழகங்கள் கலந்து கொண்டன. ஒவ்வொரு கழகத்தினதும் தலைவர். செயலாளர்,பொருளாளர் ஆகியோர் அவசியம் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் ஆங்கில கல்வியில்...........

(6ம் பக்க தொடர்ச்சி)

களுடன் வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற கிராமம் அதே போல் பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர் களும் மருதமுனையின் முன்மாதிரியான செயற்பாடுகளுக்கு தொடர்ந்து அணி சேர்ப்பவர்களாக திகழ வேண்டும்.

தற்பொழுது அகில உலக ரீதியில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் மிகவும் உணரப்பட்டுள்ளது. எல்லா விடயங்களிலும் ஆங்கிலமே செல்வாக்குச் செலுத்துகின்றது. தற்போது நமது நாட்டிலும் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்வி அமைச்சு புதிய கற்று நிருபங்களை அனுப்பி வைத்துள்ளது. எனவே மருதமுனைக் கிராமத்திலே இருக்கின்ற பெற்றோர்கள் ஆசிரியர்கள். அதிபர்கள் எல்லோரும் சேர்ந்து ஆங்கிலக் கல்வியின் மூலம் நமது மாணவர்கள் பயில ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்நிகழ்வில் முன்னாள் கல்விக்கல்லூரி பீடாதிபதி ஏ.ஆர்.ஏ.அஸீஸ், சட்டத்தரணியான ஏ.எம்.பத்துறுதீன். எம்.எஸ். எம்.ஜெமீல். எஸ்.எம்.எம்.பழீல். உதவிப் பிரதேச செயலாளர் எம்.ரி.எம்.நௌபல். ஓய்வு பெற்ற அதிபர் இஸ்மாயில் மௌலானா. ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழக செயலாளர் மெரிகோல்ட் இப்றாகீம். காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபர் எம்.எச்.காதர் இப்றாகீம். ஐக்கிய இளைஞர் பீ.எம்.எம்.பவுஸீப் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் பெருமளவான பெற்றோர்களும். மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.


## பிறந்தநாள் வாழ்த்து

**திருகோணமலையைச் சேர்ந்த நவநீதன் அனுஸியா தம்பதியினரின் செல்வப் புதல்வி கிருஷிகா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (16.11.2000) வியாழக்கிழமை 364/4, சாஸ்திரியார் ஒழுங்கை, பார் வீதி, மட்டக்களப்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, பெரியம்மாமார் , பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணன்மார், உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு சீரோடும், சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.**



**கிருஷிகா**

Advt.

# மனித உரிமைகள் தினம்

## அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டி

(மைக்கல்)

சர்வதேச ஐக்கிய நாடுகள் தினமும் உலக மனித உரிமைகள் தினமும் டிசம்பர் பத்தாம் தேதி அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினத்தை சிறப்பிக்கும் முகமாக கரித்தாஸ் இலங்கை செடெக் நிறுவனம் க.பொ.த.சாதாரணதர, க.பொ.த.உயர்தர மாணவர்கள் மத்தியில் ஓர் கட்டுரையைப் போட்டியை நடத்தவுள்ளது.

மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ள இப்போட்டியில் ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் வெற்றி பெறுவோருக்குப் பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

கட்டுரைகள் யுத்தமும் மனித உரிமைகளும் எனும் தலைப்பில் 1500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதப்பட்டு மாணவரின் பெயர், பிறந்த திகதி , வகுப்பு, ஆகிய விபரங்களோடு கட்டுரை மாணவரின் சொந்த முயற்சி எனவும் பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பரிசு விபரம்

முதல் பரிசாக 5000 ரூபாவும் இரண்டாம் பரிசாக 2500 ரூபாவும் மூன்றாம் பரிசாக 1000 ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

தொடர்ந்து 10 சிறந்த கட்டுரைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல கட்டுரைகளும் இம் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் இயக்குனர், மனித வள மேம்பாட்டு நிலையம், 52, மத்திய வீதி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

# அகதிகளுக்கு இரண்டுமாத உணவுப் பொருள்கள்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தின் தி ருக்கோவில் பிரதேசத்திலுள்ள தங்கவேலாயுதபுரம் முகாம் அகதிகளுக்கென இரண்டுமாத கால உணவுப் பொருட்கள் நேற்று கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உலக உணவு ஸ்தாபனம் இந்த உணவுப் பொருட்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது. இதேவேளை திருக்கோவில் அகதிகளை தங்களுக்கு செப்டம்பர் ஒக்டோபர் மாத உலர் உணவுப் பொருட்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று அப்பிரதேச மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சங் கரிடம் சென்று முறைப்பாடு செய் துள்ளனர். இதனை அடுத்து இன் னும் மூன்று தினங்களில் உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்படும் என்று அகதிகள் பிரதிநிதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் தந்தி மூலம் அறிவித்துள்ளார். இதே சமயம் இம்மாதத்துக்குரிய உலர் உணவுப் பொருட்கள் எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இவ்வகதி முகாமில் சுமார் 2513 குடும்பங்கள் கடந்த 10 மாத காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

# மட்டக்களப்பில் பனை அபிவிருத்தி கைவினைப்பயிற்சி

(ஓட்டமாவடி நிருபர்)

சமுர்த்தி செயலணியின் மூலம் வகுக்கப்படும் திட்டங்கள் யாவும் பிரதேச அபிவிருத்தியையே நோக்காகக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கமைய ஏறாவூர் -3 பிரிவு சமுர்த்தி செயலணியினர் படித்துவிட்டு வேலைவாய்ப் பற்றிருக்கும் இளம் யுவதிகளுக்கான பனை அபிவிருத்தி கைவினைப் பயிற்சிநெறி ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இப் பயிற்சி நெறியானது மட்டக்களப்பு மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வருவதாகவும் இப்பயிற்சி, உற்பத்தியாக்கல், விற்பனை, கண்காட்சி போன்ற திட்டங்கள் அடங்கலாக, இளம் யுவதிகள் சிறு வருமானங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளப்படுவதாக செயலணியின் தலைவர் எம்.எஸ்.றவூப் தெரிவித்தார்.

இப்பயிற்சிக் காலத்தின் போது மாணவிகளின் வரவுகளைக் கருத்திற் கொண்டு மாதமொன்றிற்கு சமுத்தி உதவி பெறுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவிக்கு ரூபா 1050 ரூபா வரையிலான தொகையும், சமுத்தி உத்வி பெறாத குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவிக்கு ரூபா 540 ரூபா வரையிலான தொகையும் உதவித் தொகையாக தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மூலம் வழங்குவதற்கான செயற்பாடுகளை மாவட்ட பனை அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, இப்பயிற்சிக் காலத்தின்போது மாணவிகளின் உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தக்கூடிய வாய்ப்புக்களையும், ஏனைய வசதிகளையும் . மாவட்ட பனை அபிவிருத்திச் சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக அதன் இணைப்பதிகாரி எஸ்.நாகேஸ்வரன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு இ.போ .ச . புதிய முகாமையாளர்

(நமது நிருபர் சோமு)

மட்/நியூ ஈஸ்டன் கம்பனிக்கு புதிய சாலை முகாமையாளராக கே.சாந்தகுணம் புதன்கிழமை பதவியேற்றுள்ளார்.

இவரை சாலைத் தொழிலாளர்கள் உட்பட பொறியியல் ஊழியர்களும் மாலை சூடி வரவேற்றனர். இவ் வைபவத்தில் தொழிலாளர்கள் ஸ்ரீலங்கா தேசிய ஊழியர் சங்க அங்கத்தவர்கள் சாலை அதிகாரிகள் சகலரும் கலந்து கொண்டனர்.

புதிதாக வந்த சாலை முகாமையாளர் பேசுகையில் பழையவற்றை மறந்து கட்சி பேதமின்றி சகலரும் இச்சாலை அதளபாதாளத்தில் இருப்பதை கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மக்களின் போக்குவரத்தின் சேவைக்காக முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியுடன் முன்னேற்றுவதற்கு தன்னால் இயன்ற முழுச் சேவையையும் செய்ய விருப்பதாகவும் சென்ற காலங்களில் இடம்பெறற் குறைகளை நிவர்த்தி செய்து புதிய சகாப்தத்தை உருவாக்க சகல தொழிலாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(கிண்ணியா நிருபர்)

தேசிய தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயத்தில், ''பாட சாலையிலிருந்து வேலை உலகிற்கு'' என்னும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு கடந்த வாரம் நடத்தப்பட்டது.தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் கே.எஸ். கார்த்திக், கிண்ணியாக் கோட்டக்கல்வி அதிகாரி யூ.முகைதீன் பாவா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

நாட்டின் 90 கல்வி வலயங்களைச் சேர்ந்த 258 பாடசாலைகளில் இது போன்ற கருத்தரங்குகள் நடத்தப்படுவதாக உதவிப் பணிப்பாளர் கார்த்திக் தெரிவித்தார்.

## பிரதியமைச்சர் நஜீபுக்கு பாரிய வரவேற்பு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், தபால் தொலைத்தொடர்பு பிரதியமைச்சருமான ஜனாப் நஜீப்.ஏ. மஜீதுக்கு கிண்ணியாவில் வரவேற்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து இதுவரை எவரும் அமைச்சர்களாக நியமிக்கப்படவில்லை. எனினும் பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் நஜீப் மூன்றாவது பிரதி அமைச்சராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ''பாசறைத்தீ''

(ஜலீல்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணீய சங்கத்தினால் பாசறைகளின் போது சாரணிய மாணவர்களின் எழுத்துத் திறமை, கலைத்திறமைகளினை வளர்ப்பதற்கு ஓர் பத்திரிகை வெளிவர வேண்டும் என உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா அவர்களின் விருப்பத் திற்கிணங்க அண்மையில் நடைபெற்ற மூன்று நாள் சாரணிய பயிற்சிப் பாசறையின் போது ''பாசறைத்தீ'' எனும் பத்திரிகை வெளியீடு செய்யப்பட்டது.

இப்பத்திரிகையின் ஆசிரியராகமருதமுனை -ஜனாதிபதி சாரண தலைவர் எம்.ஏ.தில்ஸான் பொறுப்பேற்றார். வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினரக சவூதி அரேபியா சாரணிய சங்கத்தின் பிரதிநிதி டாக்டர் அக்பர் ஹலால்தீன் கலந்து கொண்டார்.

தலைமையுரையை தேச சாரணத் தொண்டர் எம்.ஐ.எம். முஸ்தபா நிகழ்த்தினார். பத்திரிகையினை பிரபல பத்திரிகை. வானொலி செய்தியாளர் ஜனாப். றபீக் பிர்தௌஸ் விமர்சிக்க ஏற்புரையை பத்திரிகை ஆசிரியர் தில்ஸான் நிகழ்த்தினர் இவ்வெளியீட்டு விழாவில் மாவட்ட சாரணிய தலைவர் ஜலீல், உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஏ . எல்.ஏ. மஜீட், யு.எல். உதுமாலெவ்வை இன்னும் பல சாரணிய தலைவர்களும், 200ற்கும் மேற்பட்ட சாரணியர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் பாண்டிருப்பு மகா வித்.சாரணிய தலைவர் திரு. ஏ.கோகுலராஜா நன்றியுரை நிகழ்த்தினார்.



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்றுச் செல்லும் உமா சங்கரனைப் பாராட்டி இடம்பெற்ற விழாவில் அதிபர் ஐ.எல்.மஜீத் உமா சங்கரனுக்கு பரிசு வழங்கி கௌரவிப்பதையும் அருகில் மௌலவி ஏ.செயினுலாப்தீன், பிரதி அதிபர் ஏ.கே. எம்.நியாஸ் ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: முபா)

# மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் மாணவர்இல்ல பவளவிழா

**மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் தனது பவளவிழா தொடர்பான நிகழ்வுகளாக ஆளுமை விருத்திச் செயலமர்வும் - கருத்தரங்கும் ஏற்பாடு செய்துள்ளது.**

செயலமர்வு கருத்தரங்கு தமிழ்நாடு கன்னியாகுமரி விவே கானந்த கேந்திரத்திலிருந்து வருகைதரவுள்ள சிறப்பு நிபுணர் ந.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான குழுவினரால் நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களும், பயிற்சி ஆசிரியர்களும் (ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கல்வியற் கல்லூரி) பங்குபற்றவுள்ளனர்.

பவளவிழா தொடர்பான நிகழ்ச்சித் தொடரில் முதலாவது நிகழ்ச்சியாக ''ஆன்மீகப் புத்தகக் கண்காட்சி கடந்த செப்டம்பரில் கற்குடா வலயத்திலுள்ள செங்கலடி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

**கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்**

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் இம்மாதம் 20ம் திகதியும், கல்லடி விபுலா.மணி மண்டபத்திலும், களுதாவளை மகா வித்தியாலயம் 2[illegible] திகதியும். வெஸ்லி கல்லூரி-கல்முனை 23ம் திகதியும், கல்லடி-விபுலானந்த மணி மண்டபத்தில் 24ம் திகதியும். கல்லடி விவேகானந்த மகளிர் ம.வித்தியாலயம் 25 திகதியும் நடைபெறும். இத் தகவலை சுவாமி ஜீவனானந்தா தெரிவித்துள்ளார்.

# மாட்டு ஈரலில் துப்பாக்கி ரவை

(முபா)

சாப்பிடுவதற்கு மாட்டு ஈரல் வாங்கிய ஒருவர் அதை அறுத்தப் பார்த்தபோது துப்பாக்கி ரவை ஒன்று இருப்பதைக் கண்டார்.

இச்சம்பவம் கல்முனையில் இடம்பெற்றுள்ளது. ஈரல் வாங்கிய இந்த நபர் ஈரலில் இருந்த ரவையைக்காட்டி எமது நிருபரிடம் விடயத்தைக் கூறினார்.

பல மாதங்களுக்கு முன் இந்த மாடு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இருக்கும் என்றும், இம்மாடு குணமடைந்தபின் இந்த மாடு அறுக்கப்பட்டுள்ளது. ஈரலில் தங்கிய ரவை அறுக்கும்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஊகம் தெரிவித்தார்.


அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்

ARROWROOT POWDER

பிரவுண்சன் அரறூட் மாவு

பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் ''அரறூட் கஞ்சி'' குழந்தைகள் வயதானவர்கள் எல்லோருக்கும் போசாக்கு மிக்க உணவு போலிகளைத் தவிர்ப்பதற்கு பிரவுண்சன் அரறூட் மாவு என்று கேட்டு வாங்குங்கள்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைக்கும் இடங்கள்**

**மொத்த விற்பனையாளர் :**

எஸ். மகேந்திரன் 82/4, பழைய கல்முனை வீதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.

மற்றும்:

- டிப்டொப் பார்மசி, 4.பிரதான வீதி, மட்டக்களப்பு
- சென்ரல் மெடிக்கல், பார் வீதி, மட்டக்களப்பு
- வேல் முருகன் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு
- நியு சர்மிளா ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, காத்தான்குடி
- சென்ரல் பார்மசி, ஏறாவூர்
- முஜீபாஸ் ஸ்ரோர்ஸ், பழைய மார்கட் வீதி, ஓட்டமாவடி.
- டி.எல்.டி., வாழைச்சேனை

BROWNSON INDUSTRIES

189, பாங்ஷால் வீதி, கொழும்பு - 11 T.P.327197 FAX: 458507

# புள்ளிகளை எதிர் பார்க்கும் பெற்றோர் பிள்ளைகள் மீது நடத்தும் கெடுபிடிகள்

மு. இராசரத்தினம்

பாடசாலைகள் யாருக்காக? இது ஒருமுட்டாள் தனமான கேள்வியாக எல்லோராலும் கருதப்படும். மாணவர்களுக்குத்தான் பாடசாலை என்பது புரியாதா? ஏன் கேட்கிறேன் எனின் இங்கு மாணவர்கள் எவ்வாறு நோக்கப்படுகின்றனர். ஓர் ஆசிரியர் தன் மீது எத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படக் கூடாது எனக் கருதுகிறாரோ அவற்றை எல்லாம் மாணவர் மீது திணிப்பதற்கு என்ன தகுதி அவருக்குண்டு.

வகுப்பறையில் மாணவர்களைத் தம் சட்ட திட்டங்களாலும், அதிகாரக் குரலாலும் அடக்கி வைத்து அமைதியாக வைத்திருக்கும் ஆசிரியர், அதிபரால் பாராட்டப்படுகின்றார். ஆனால், அங்கு நடப்பது என்ன? என்பது பற்றி அவர் அறிந்திருப்பதில்லை.

பெரியவர்கள், தம்மீது மற்றவர் கட்டுப்பாடு விதிப்பதை ஒரு போதும் விரும்புவதில்லை. மித மிஞ்சிய கட்டுப்பாடும், வற்புறுத்தலும் அவசியமற்றவை என்பதும் உண்மை. எனவே, குழந்தைகள் மீது இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது சரியானது தான்?

பெற்றார் சிலர் தம் குழந்தைகள் மீது வன்முறையைப் பிரயோகிக்குமாறு ஆசிரியர், அதிபர் ஆகியோரிடம் வேண்டுகின்றனர். இது அவர்கள் இளமையில் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடாகும்.

இன்று எல்லாக் குடும்பங்களிலிருந்தும் பிள்ளைகள் பள்ளிகளுக்குப் போகின்றார்கள்.

ஆனால், பெற்றார் பள்ளிகளில் நடைபெறுபவனவற்றை அறிந்து கொள்வதிலோ, கற்றற் செயற்பாட்டில் இடம்பெற்று வரும் மாறுதல்களைப் புரிந்து கொள்வதிலோ ஆர்வம் காட்டவில்லை. மாறாகப் பரீட்சைப் புள்ளிகளை தான் கவனஞ் செலுத்துகின்றனர். இறுதிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் பெறுபேறு வாழ்வதற்கான ஒரு வேலையைப் பெற்றுக்கொடுக்கும் என்பது சிலரது எதிர்பார்ப்பு. ஆதலால் பாடசாலைக்கனுப்புவதன் நோக்கம் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதாகவே உள்ளது. இன்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றார் எதிர்பார்ப்பதும் புள்ளிகளையே ஆதலால் வீட்டிலும் கெடுபிடிகளே மிகுதி. இது ஆரோக்கியமான தன்று.

இது அரசுகளுக்கும், கல்வியியலாளருக்கும் மிகவும் வாய்ப்பாக உள்ளது. மாணவர் பெற்றுள்ள தேர்ச்சி இது தான் என்று அறிவிக்கக் கூடிய வகையில் 10 அல்லது 11 வருடங்களுக்கான பாடத்திட்டம் ஒன்றுடன், அதற்கான பாடநூல்களை உருவாக்குவதும் அதற்கான மதிப்பீட்டு முறைமையை ஆக்கிக் கொள்வதும், இவற்றைப் பிராந்திய அலுவலகங்கள் மூலம் ஆசிரியர்களைக் கொண்டு அமுல்படுத்துவதும் போதுமானவை. இவற்றின் நன்மை தீமைகள் பற்றியோ, செயன்முறை பற்றியோ, போதனா முறை பற்றியோ அக்கறைப்படுவது அவசியமற்றதாகப் பெற்றாராலும் அதிகாரிகளாலும் கருதப்படுவது!

கட்டுப்பாடு ஒழுங்கு என்பன பாடசாலைகளால் கற்றுக் கொடுக்கப்பட வேண்டியவை தான். அதற்காக ஆண்டான், அடிமை முறைமையைக் கற்றுத்தர வேண்டியதில்லை. குழந்தைகள் தம்முள் மறைந்துள்ள உள்ளார்ந்த திறமைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பான பாடசாலைச் சூழல் வேண்டும். வகுப்பறை மகிழ்ச்சியுடையதாதல் வேண்டும். ஒரு வாய், பலகாதுகள் என்ற நிலைமாறி சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்துக்கு இடமளித்தல் வேண்டும்.

மயான அமைதி நிலவும் வகுப்பறையே மாணவர் கவனத்தை ஒரு முகப்படுத்தும் என்று கொள்ள இயலாது. பங்கேற்புடன் உள்ள வகுப்பறையில் பூரண அமைதி நிலவாது.

தெரியாததைத் தெரிந்து கொள்வதற்காக எழுப்பப்படுவது வினா? எனின் இன்று தனக்குத் தெரிந்தது பிள்ளைகளுக்குத் தெரியுமா? என அறிவதற்காகவே வகுப்பறையில் வினாக்கள் கேட்கப்பட்டு வருகின்றன. இப்படிச் சொல்வதன் நோக்கம் மாணவர்கள் வினாவி அறிவோராய் மாற்றப்படல் வேண்டும் என்பதே.

கட்டுப்பாடானதும் கெடுபிடி மிக்கதுமான ஒரு சூழல் மாணவரது சுய சிந்தனைக்கு இடையூறு விளைவிக்கும் கேள்விக்கணைகளால் பெற்றோரைத் துளைத்தெடுக்கும் ஆரம்ப வகுப்புக் குழந்தையொன்று பள்ளிச் சூழலில் வாயே திறவாததற்குக் காரணம் அங்கு நிலவும் கெடுபிடி தெரியாததைத் தெரியாது என்று கூறவும் தெரிந்ததைச் சுதந்திரமாக வெளியிடவும், உள ஆரோக்கியம் வலுப்பெறவும் பங்கேற்புடன் கூடிய கலந்துரையாடல்கள், களப்பயணங்கள், செயல்முறைகள் என்பன இன்றியமையாதன.

ஆனால், சமூகம் பாடசாலைகள் மீது கொண்டுள்ள அதீத நம்பிக்கை காரணமாக அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்ள முனைவதில்லை. நவீன கல்விச் சீர்திருத்தத்தின் உண்மையான பயன்களைப் பிள்ளைகள் உரியவாறு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பெற்றோர் பாடசாலை இடைத்தொடர்பு வலுவுடையதாகவும் அன்னியோன்னியம் மிக்கதாகவும் அமைதல் வேண்டும். அப்போது தான் வகுப்பறையில் என்ன நடைபெறுகின்றது. என்பது புரியும்.

பிள்ளைகளைக் கட்டிவளர்ம் கட்டி வைக்காது ஒருவர் மற்றவருடன் கலந்துரையாடிக் கற்கவிடும் போது ஒருவர் மற்றவரிடமிருந்து கற்கின்றார். கல்வி சுவையுடையதாகிறது. புதிய தேடல் ,உருவாகிறது. கெடுபிடி மிக்க வகுப்பில் இது சாத்தியமா?

அண்மைக் காலத்தில் G.T.Z ,இன் T.I.P செயற்றிட்டம் "மகிழ்ச்சிகரமான கற்றல்" எனும் தலைப்பில் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் இங்குள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கு செயலமர்வொன்றை நடாத்தியது. இதில்

1.பிள்ளையை அறிவோம்.
2.உயிரோட்டமுள்ள வகுப்பறை
3. நெருக்கீடுகளுக்குள் உள்ள பிள்ளைகள்
4. முரண்பாட்டுத் தீர்வு என்னும் நான்கு விடயங்கள் தொடர்பாகவும் கருத்துரைகளும் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

இதன் பின்னரேனும் பாடசாலைச் செயற்பா ள் பிள்ளைகளை உள நெருக்கீடுகளுக்கு உள்ளாக்கா திருக்குமா? மாணவரை அறிந்து புரிந்து தேவைகளை இனங்கண்டு கெடுபிடியற்ற சூழலில் மாணவர் தம் திறன்களை விருத்தி செய்து கொள்ள வழிகாட்டும் நிறுவனமாக விளங்கும் பாடசாலையே மாணவருக்குத் தேவை. தேனுண்ண வருகின்ற வண்ணத்துப் பூச்சிகளின் உணர் கொம்புகள் செயற்கைப்பூச்சிகளில் சிக்கி முறியாதிருக்கக் கல்வியுலகினதும்,சமூகத்தினதும் கரிசனை பாடசாலைகளின் பால் திரும்ப வேண்டும்.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

# மாணவர்கள் ஆங்கில கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## பாராட்டு விழாவில் பேச்சு

(மருதமுனை நிருபர் எம்.ஐ.எம்.வலீத்)

எதிர்காலத்திலே பல்வேறு உயர் பதவிகளையும் வகிக்கவிருக்கின்ற உயர்கல்வி மாணவர்கள். மாணவப் பருவத்தில் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு எவ்வாறு மரியாதை செலுத்தி வந்தார்களோ அதை விடவும் கூடுதலான மரியாதையை பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கொடுக்க வேண்டும். உள்ளத்தில் அந்த மரியாதை வரா விட்டால் குறைந்தது பாசாங்கு செய்தாவது தான் மரியாதை உள்ள பிள்ளை எனக் காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத் தலைவரும் பொலிஸ் பரிசோதகருமான டாக்டர்.எச்.எஸ்.ஜமால்தீன்.

2000ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும், அதிபர்களையும், பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களையும் பாராட்டி மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம் மக்கள் மண்டபத்தில் நடாத்திய பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பொலிஸ் பரிசோதகர் டாக்டர்.எச்.எஸ்.ஜமால்தீன் கூறியதாவது:-

மற்றவர்களை நாம் மரியாதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் இருந்தால் மட்டும் தான் ஒழுங்கான முறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், சிறப்புப் பட்டங்களையும் பெறக் கூடியதாகவும் இருக்கும். அல்லாத விடத்து எப்படிப்பட்ட திறமைகள் இருந்தாலும் அந்தத் திறமை மறைக்கப்பட்டு விடும். என்பதனை முன்னர் பட்டம் முடிந்தவர்களை கேட்டு ஆலோசனை பெற்றுக் கொள்வது நல்லது.

மருதமுனைக் கிராமம் என்று கூறும் பொழுது ஒரு நாட்டிற்கு எப்படி இறைமை இருக்கின்றதோ அதே போன்று மருதமுனைக் கிராமத்திற்கும் இறைமை இருக்கின்றது. ஒரு நாட்டிற்கு வெளிநாட்டுக் கொள்கைகள் இருப்பது போன்று மருதமுனைக்கும் இருக்கின்றது. அந்த வகையில் மருதமுனைக் கிராமம் இன்றும் கூட ஏனைய கிராமத்தவர்களுடன் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் மிகவும் அன்யோன்யமாக இருக்கின்றது.

மருதமுனைக் கிராமம் எப்பொழுதும் சமாதானத்தை விரும்புகின்ற கிராமமாகும். ஏனைய மக்களையும் தனது மக்கள் என்று ஏற்றுக் கொள்கின்ற கிராமம். ஏனைய மக்களுடைய அபிலாசைகளை உள்வாங்கி அதற்கேற்றாற் போல் முன்மாதிரியான செயற்பாடு

(4ம் பக்கம் பார்க்க)

# பரீட்சைக்கு தயார்படுத்தும் நிகழ்ச்சி

(கல்முனை மத்திய நிருபர் -ஜெஸ்மி)

மாணவர்கள் எவ்வளவு தான் அதிகமாகப் படித்திருந்தாலும் இறுதி அரசாங்கப் பரீட்சை எழுதுவதற்கு முன் பல முன்னோடிப் பரீட்சைகளில் பங்கேற்பதன் மூலமே அவர்களுக்கு ஏற்படும் பயம், கூச்சம் போன்ற உணர்வுகளிலிருந்து அவர்கள் மீள முடியும். இன்று எமது பரீட்சையினை எங்களின் அமைப்பைச் சேர்ந்தவர்களே நடாத்துகின்றனர். அத்துடன் நாங்களே மேற்பார்வையாளர்களாகவும் இருக்கின்றோம். இவ் ஏற்பாடு நிச்சயம் மாணவர்களுக்குப் பயன் அளிக்கும்.

இவ்வாறு கடந்த ஞாயிறு மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் மக்கள் மறுமலர்ச்சி இயக்கத்தால் நடாத்தப்பட்ட பொதுப் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கான இறுதி நாள் நிகழ்வின் போது அதன் தலைவர் தமதுரையில் தெரிவித்தார்.

மூன்று பாடசாலைகளில் ஒரே நேரத்தில் நடைபெற்ற இப்பரீட்சையில் 210 மாணவர்கள் தோற்றினர். இதில் பாடசாலை மட்டத்தில் சிறந்த பெறுபேற்றினை பெறும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், பாராட்டும் பத்திரமும் விரைவில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



ஏறாவூர் -39 சமுர்த்தி திட்டத்தின் கீழ் வடிகால் திட்ட வேலைகளை ஆரம்பித்து வைக்கும் வைபவத்திற்கு பிரதம அதிதியாக வருகை தந்த வடக்கு கிழக்கு மாகாண சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் எம்.நடேசராசா செயலணியின் தலைவர் எம்.எஸ்.றவூப் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இரா. நெடுஞ்செழியன் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைப்பதோடு, ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் கே. விமலநாதன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.



# விளையாட்டுச் செய்திகள்




நவம்பர் மாதம் 12,2000 இல் நடந்த சென்ற் பீற்றேர்ஸ் பேர்க் ஆண்களுக்கான ரெனிஸ் போட்டியில் ரஷியாவைச் சேர்ந்த மார்ட் சபின் ஸ்லோவாக்கியாவை சேர்ந்த டொமினிக் ஹர்பற் என்பவரை தோற்கடித்தார் அவ் வெற்றிக் களிப்புடன் மேலுள்ள படத்தில் காணப்படுகிறார்.

## முகாமையாளரான உதைப்பந்தாட்ட வீரர்

(முபா)

பிரபல உதைபந்தாட்ட வீரர் மரதோனா ஆர்ஜன்டினாவில் உள்ள அல்மக்ரோ கழகத்தின் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். உலக உதைப்பந்தாட்ட அரங்கில் பெரும் பிரச்சினைக்குரியவராக திகழ்ந்த இவருக்கு தற்போது வயது நாற்பது என்னிடம் அற்புதங்களை எதிர்பார்க்க வேண்டாம் என மரதோனா கூறியுள்ளார்.

## மலேசியா பயணம்



(திருமலை நிருபர்)

புனித ஜோன் அம்புலஸ் கடேத் சர்வதேச பாசறை இம் மாதம் 18ம் திகதி தொடக்கம் 23வரை மலேசியா கோலாலம்பூரில் நடைபெறுகிறது.

இலங்கையில் இருந்து 10 கடேத் உறுப்பினர்களும், 02 உத்தியோகத்தர்களும் இதில் பங்கு கொள்வதற்கு பயணமாகின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் திரு கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் கே.மயூரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான பயண ஒழுங்குகளை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும், திருகோணமலை மாவட்ட புனித ஜோன் அம்புலன்ஸ் சங்கமும் மேற்கொள்கின்றன.

# பிறந்த திகதி தருமயோகம்.

## ஜோதிடம் -ஆகஸ்ட- 05

ஆகஸ்ட் மாதம் 5-14-23ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் 5 அதன் அதிபதி புதன் ஆகஸ்ட் 5,14இல் பிறந்தவர்கள் சந்திரன் ஆதிக்கமும், 23 இல் பிறந்தவர்கள் சூரியன் ஆதிக்கமும் பெற்றவர்கள்.

சூரியனும், புதனும் இணைந்திருந்தாலே கல்வி மான். அது புதஆதித்ய யோகமாகும். மேலும் சூரியனும், புதனும் சிம்மராசியில் இருப்பது உயர் கல்வியையும் தரும். ஆனால் எதிலும் அவசரம், பொறுமை குறைவு. இவை களையும் தரும். எதையும் நினைத்தவுடன் முடிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள். அது நடை முறைக்கு ஒத்துவராததாகும். விதைத்த விதையும் உடனே பலன் தருவதில்லையே அதை உணர்ந்து செயல்பட்டால் வெற்றி உங்கள் கையில்.

எழுத்தாளராக, கலைஞராக, நடிகராக இவைகளில் ஏதாவதொன்றில் சிறப்புற்று திகழ்வீர். உத்தியோகமும் உயர்வும் தரும். தன்னம்பிக்கையும் சுயக்கட்டுப்பாடும் தேவைப்படும். காதல் வாழ்க்கையில் நிலையான எண்ணமில்லாதவர்கள். திருமண மும் உறவில் அமையாது. வாகனம் விரைவாக செலுத்தும் ஆற்றல் பெற்றவர்கள். எவருடைய அறிவுரையும் கேட்க மாட்டார்கள். அதனால் சில தொல்லைகள் ஏற்படும்.

பெரிய நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் நிர்வாகம் செய்யும் திறமை பெற்றவர்கள். அதில் செல்வமும், புகழும் பெறுவீர்கள். சொந்தமாக தொழில் செய்வதைவிட பணியாற்றுவதே நன்மை தரும். எல்லோரையும் மோகிக்கச் செய்யும் சக்தி இதற்குண்டு. இவ்வெண்ணின் பலமுடையோர் ஜனங்களால் பெரிதும் விரும்பப்படுவர். மிக எளிதில் குழந்தைகள் போல எவரிடமும் சுலபமாகப் பழகிவிடுவார்கள்.

மனதில் தோன்றுவதை சுலபமாக வெளியிட்டுவிடுவார்கள். ஒன்றையும் மறைக்கத் தெரியாது. ஒன்று நிச்சயம் இன்று செய்வதை நாளை செய்ய விருப்பமிருக்காது. எதையும் மிகச் சுலபமாகச் சாதித்துவிடலாம் என்று உண்மையாக நம்புவார்கள். பழமையை வெறுப்பர் புதுமையை நோக்கி விரைவர்.

அஜீரணக் கோளாறு அடிக்கடி ஏற்படும். உடம்பில் நரம்பு வலியும் இருக்கும். எந்த வியாதி ஏற்பட்டாலும் அவை விரைவில் குணமாகும்.

1-5-10-14-19-23-28ம் தேதிகளில் எந்த ஆண்டு மாதமானாலும் நன்மையே தரும். 5-14-23-32-41-50-59-68-ம் வயதுகளில் உங்கள் வாழ்க்கையிலே மிகவும் நன்மையான நிகழ்ச்சிகள் நடைபெறும். 5-14-23ம் தேதிகளில் பிறந்தவர்களின் உதவியும் நட்பும் நிலையானதாகவும், உதவியாகவும் அமையும். வாழ்க்கைத் துணையும் இவ்வெண்ணில் அமையுமானால் நகமும்-சதையும் போல் என்றும் இணைபிரியாமல் இல்லற வாழ்க்கை நடத்துவார்கள்.

வர்ணம்:- சாம்பல் வர்ணமே மிக்க அதிர்ஷ்டமானது மற்ற எல்லாம் இலேசான வர்ணங்களையும் தரிக்கலாம்.

வைரம். DIAMOND யொலிக்கும் தன்மை யுடையது. ஒப்படர்த்தி 3.52; கடினத்தன்மை 10; ஒளிவிலகல் தன்மை 2.43; எரியும் தன்மை உடையது. இது ஒரு கார்பன் இக்கல்லை உடலில் அணிவதால் வாதம், பித்தம், சளி, கண்நோய், போன்ற நோய்களை நீக்கி உடலை அழகாக்கி அதிர்ஷ்டத்தையும் சந்தோஷத்தையும் தரவல்லது.

வைரம் தரிக்க முடியாதவர்கள் வைரம் போன்று ஒளி வீசும் வெள்ளை ஸர்க்கன் (ZIRCON) கற்களைத் தரிக்கலாம் நன்மை செய்யும்.

**வே. தவராசா**

# அதிர்ஷ்டம் ஒத்தி வைப்பு

(எஸ்.எஸ்.குமார்)

திருகோணமலை அரச சேவைகள் கழகத்தினர் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் வகையில் அதிர்ஷ்ட லாபச் சீட்டு மூலம் நிதி சேகரித்து வருகின்றனர். இதன் குலுக்கல் ஐப்பசி மாதம் 5ம் திகதி நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இது மார்கழி 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# வாசகர் நெஞ்சம்

## பாடசாலைகளே கல்வியை மறுக்கலாமா?

ஒக்டோபர் மாதம் பல்வேறு நிகழ்ச்சிகளாலும் கற்பித்தல் இன்றியே கழிந்ததை யாவரும் அறிவோம். க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பற்றிச் சிறிதும் கவலைப்படாத ஆசிரியர்கள் ஹர்த்தாலைச் சாட்டாகக் காட்டி 31-10-2000 அன்று பாடசாலைக்கு வந்த பெருந்தொகையான மாணவர்களை வீட்டுக்கு அனுப்பிச் சாதனை படைத்தோர் ஆரையம்பதியிலுள்ள இரு-மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சில ஆசான்களே கல்வியே எங்கள் சொத்து எனக் கூப்பாடுபோடுவோம் இந்த வேலியே பயிரை மேயும் அநியாயத்தை அனுமதிக்கலாமா? மண்முனைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி வீற்றிருக்கும். மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் கூட இந்த நாடகம் அரங்கேறியுள்ளது. பெரும் அதிர்ச்சி தருகிறது. பதவி உயர்விலும், சம்பள உயர்விலும் கரிசனை காட்டும் அதிபர்களும் ஆசிரியர்களும் நேர அட்டவணைக்கு மாறாகத்தம் வசதிப்பட பாடசாலையை நடாத்தலாமா? போலியான பா.ம.க.செயற்பாடு கேலியான தவணைப் பரீட்சை இவற்றால் மாணவர்களுக்குக் கூடுதல் புள்ளிகள் போட்டு மாணவர்களையும் பெற்றோரையும் ஏமாற்றும் இத்தகைய புல்லுருவிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதன் மூலமே கல்வித் திணைக்களத்தின் நம்பகத் தன்மை மேம்படும்? இதைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்வார்களா?

**அ.பாலசுந்தரம்**
**ஆரையம்பதி**

## மட்/சேனைத் தெரு வீதியின் அவல நிலை

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்டதொரு பகுதியே கருவப்பங்கேணியாகும். இக் கருவப்பங்கேணிக்குச் செல்லும் வீதிகளில் பிரதானதொரு வீதியே இச்சேனைத்தெரு வீதியாகும். இது ஒரு அகலமானதும், நீளமானதுமான கிறவல் வீதியாகும். இவ்வீதி நீண்ட காலமாக் குன்றும், குழியுமாக கவனிப்பாரின்றி இருந்து வருகின்றது. சிறு மழை பெய்து விட்டால் போதும் தண்ணீர் தேங்கி நிற்பதினால் பொது மக்கள் இவ் வீதியின் ஊடாக போக்குவரத்துக்கள் செய்து கொள்வது பெரும் சிரமப்பட வேண்டியுள்ளன.

எனவே இப் பகுதி வாழ் மக்களின் போக்குவரதது நலன கருதி வீதியினை மேலும் கிறவல் பரவி வீதியை உயர்த்தி மேடு, பள்ளங்கள் இல்லாம திருத்தியமைக்கவோ அன்றி கல் பரவி தார் வீதியாகவோ திருத்தியமைத்துக் கொடுக்க மாநகர சபையினரோ, அன்றி வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ முன்வருவார்களா?

**கல்லடி**
**மூர்த்தி**

## ஆரையம்பதி வைத்தியசாலையின் அவல நிலை

ஆரையம்பதி வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு பல ஆண்டுகளாகியும் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் அம்புலன்ஸ் வண்டி தரம் உயராமலே இன்று வரை உள்ளது. நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லக்கூடிய எந்த வசதியுமற்ற அவ்வண்டி தனியார் வண்டிகளை விட மிகவும் மோசமாக உள்ளது. இவ்வைத்தியசாலைக்குப் பின்னர் ஆரம்பித்து வைக்கப்பட்ட காத்தான்குடி வைத்தியசாலை பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளதுடன் சிறப்பான எல்லா வசதியினையும் கொண்ட அம்புலன்ஸ் வண்டியும் உள்ளது. ஆனால் ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலை அம்புலன்ஸ் வண்டியின் நிலைமை.......?

13-11-2000ஆம் திகதி அன்று நோயாளி ஒருவரை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோது அம்புலன்ஸ் வண்டி இயங்க மறுத்துவிட்ட நிலையில் அதன் பின்னரே திருத்துனர்களை தேடிச்சென்றும் பலனளிக்காமையினால் காத்தான்குடி வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியை வரவழைத்து நோயாளியை மேலதிக சிகிச்சைக்காக அனுப்பியுள்ளார்கள். இவ்வாறு ஆபத்தான நிலையில் நோயாளிகளை வைத்து விட்டு அம்புலன்ஸ் வண்டி திருத்தவும், வேறு அம்புலன்ஸ் வண்டி தேடுவதற்குமிடையில் உயிர் பிரிந்து விடும் சூழ்நிலையும் ஏற்படும். தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகை தரும் இவ்வைத்தியசாலையின் அவலநிலை பற்றி தினக்கதிரில் பல தடவை வாசகர்களால் எழுதப்பட்டபோதும் மாற்றம் ஏதுவுமில்லை. இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து வரும் நோயாளர்களும் பல சிரமங்களுக்குட்படுகின்றார்கள். இம்மாதம் 8ம் திகதி பி.ப 2 மணிக்கு வெளிநோயாளர் பிரிவில் ஊசி போடவந்த நோயாளர்கள் தாதி உத்தியோகஸ்தர்கள் கடமைக்கு போடப்படாமையினால் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் அவல நிலையும் ஏற்பட்டது.

புதியதோர் அம்புலன்ஸ் வண்டியை இவ்வைத்தியாசாலைக்கு பெற்றுக்கொடுக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சுகாதாரப் பணிப்பாளர்கள் வைத்திய அதிகாரிகள் முன்வந்து நடவடிக்கை மேற்கொள்வார்களா?

**ச. கணேசதாஸ்**
**ஆரையம்பதி**

# கன்னட நடிகர் ராஜ்குமார் நேற்று விடுதலை

(சென்னை)

**நூற்றி எட்டு நாட்கள் வீரப்பனால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கன்னடநடிகர் ராஜ்குமார் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

நேற்றுக்காலை சந்தனக்கடத்தல் வீரப்பனால் விடுதலை செய்யப்பட்ட ராஜ்குமார் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் மனித உரிமை ஆர்வலர்கள் சுகுமாரன், கல்யாணி ஆகியோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட ராஜ்குமாரும் அவரது உறவினரான நாகேசும் தற்போது கோவை அருகே உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதேவேளை கர்நாடக முதலமைச்சர் ராஜ்குமாரை அழைத்துவர ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் விடுதலையான ராஜ்குமார் மற்றும் பழநெடுமாறன் ஆகியோர் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவித்தனர். விரைவில் சென்னை வந்து தமிழக முதல்வரை நேரில் சந்தித்து நன்றி கூற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# புலிகளுடன் செஞ்சிலுவைச்சங்கம் கப்பல் சேவை பற்றி பேச்சு

(அரியம்)

திருகோணமலைக்கும் - காங்கேசன் துறைக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிற்றி ஒவ் ரிங்கோ பயணிகள் கப்பல்சேவை தற்போது திருகோணமலைக்கும் பருத்தித் துறைக்குமிடையில் நடைபெறுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், விடுதலைப்புலிகள், பாதுகாப்பு அமைச்சு ஆகியன இதற்கான முத்தரப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

பருத்தித்துறை கடல் கொந்தளிப்புக்காரணமாக சிற்றி ஒவ் ரிங்கோ பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்கப்பல் சேவையை திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் நடாத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்படுவதாகவும் இதுபற்றி விடுதலைப்புலிகளுடன் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

## டெங்குகாய்ச்சலுக்கு 32 பேர்பலி

## 6700 பேரை அது பீடித்துள்ளது

(நமது நிருபர்)

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நேற்று வரை ஆறாயிரத்து எழுநூற்றி ஐம்பத்தெட்டு பேர் டெங்கு காச்சலால் பீடிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் முப்பத்திரெண்டு பேர் மரணமடைந்துள்ளனர். என சுகாதார அமைச்சு வெளிவிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது நாட்டிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் ஐநூற்றி இரண்டு பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். என தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதி வரை 2540 பேர் டெங்குகாச்சலினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 7 பேர் மரணமடைந்துள்ளனர்.

## மட்டக்களப்பு பட்டிப்பளை......

புறமாக நிலத்தில் கிடந்த வயர் காலில் சிக்கியதால் கந்தசாமி ருசாந்தன் (10) மாணவன் உயிரிழந்துள்ளான். இதே தினம் அம்பிளாந்துறையில் தனது தோட்ட வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்த 7 பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் செல்லத்தம்பி (40) தனது மண்வெட்டியால் தனது தோட்டத்தை துப்பரவு செய்யும் போது மண்வெட்டி மின் வயரில் பட்டதால் மின்சாரம் தாக்கி உயிர் இழந்துள்ளார்.

சட்டவிரோத முறையில் மின்சாரப் பாவனையில் ஈடுபட்டமையினாலேயே இவ்வாறு உயிர் இழக்க வேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான கொக்கட்டிச்சோலை கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படாத போதிலும் மகிழடித்தீவில் இருந்து சட்டவிரோதமாக கொக்கட்டிச்சோலையில் உள்ள சிலர் "வைண்டிங்கம்பியை" பாவித்து சட்டவிரோதப் பாவனையை ஏற்படுத்தியிருந்தனர். இதே போல் அம்பிளாந்துறையிலும் சிலர் சட்டவிரோதமாக மின்பாவனையை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான தகாதமுறையில் மின்சாரப் பாவனையால் மரணம் சம்பவிப்பதை தடுக்க முடியாது என மட்டக்களப்பு மின்சாரசபை அதிகாரி ஒருவர் தினக்கதிருக்கு தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மாலை சட்டவிரோதமாக மின்பா வனையில் ஈடுபட வேண்டாம் எனவும் அவ்வாறு மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளதாக அப்பகுதி பொது மக்கள் தெரிவித்தனர்.

## மருந்தில்லாமையால் மூவர் மரணம்

(வன்னி நிருபர்)

வன்னி வைத்தியசாலைகளில் ஏற்பட்டுவரும் மருந்துத்தட்டுப்பாடு காரணமாக மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்று புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் போதிய மருந்தில்லாமையால் இரத்த அழுத்த நோய் காரணமாக மூவர் உயிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மூடப்பட்ட நிலயத்தை திறக்கக் கோரிக்கை

(மூதூர் அனஸ்)

பொது மக்கள் நன்மை கருதி மூடப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்கும் படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருமலை மாவட்ட முன்னாள் அமைப்பாளரும் மன்னாள் வேட்பாளருமான எம்.எம்.ஏ.அனஸ் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிப கப்பல் போக்குவரத்து முஸ்லிம் சமய கலாசார விவகார அமைச்சர் றவூப் ஹக்கீமிடம் கோரியுள்ளார்.

கடந்த மே மாதம் 31ம் திகதி மூதூர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இனந்தெரியாதோரால் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அது மூடப்பட்டுள்ளது.

இதனால் பாவனைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை தனியார் வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

# சின்னஞ்சூட்டு விழா.

கல்முனை கார்மேல் பாத்திமாக்கல்லூரி சாரணர்களின் சின்னஞ்சூட்டு விழா அண்மையில் சாய்ந்தமருது வித்தியாலய மண்டபத்தில் உதவிமாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா தலைமையில் இடம்பெற்றது. சாரணிய ஆசிரியர் கே.எம்.தமீம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவில் 5 சாரணர்களுக்கு சின்னஞ்சூட்டப்பட்டனர். உதவிமாவட்ட ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை சவுதி அரேபிய சாரணிய தலைவர் அஷ்ர ஹலலுதீன் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீத் உட்பட பலரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

## வந்தாறு......

வந்தாறுமூலை பிரதான வீதியில் வைத்து கடத்தப்பட்டது. இதேவேளை மேற்படி வாகன சாரதியான தர்மலிங்கம் என்பவரையும் ஆயுதபாணிகள் வாகனத்துடன் கடத்திச் சென்றதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஏழு இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுப்பகல்சுமார் 4இலட்சம் ரூபா பணம் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட விருந்த சம்பளப் பணமே கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை வெலிக்கந்தை வெலிகல்லம் தேசத்தில் பெற்றுமுற்றுமொரு சம்பவத்தில் சுமார் 3 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்பட்டிருக்கின்றது.

## கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய ஆறுமுகம்தொண்டமான் வேண்டுகோள்!

(கொழும்பு)

மலையகத்தில் அனாவசியமாக இடம்பெற்று வரும் கைதுகள் நிறுத்தப்பட வேண்டும் கைது செய்யப்பட்டுள்ளவர்கள்உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்படுகின்றன. இவ்விபரங்கள் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க விருப்பதாகவும் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

## முஸ்லிம் சமுகத்தை......

புரிந்துகொண்டவர்கள் என்பதையும் அவர்கள் ஒன்றும் அரசியல் குருடர்கள் அல்லர் என்பதையும் படையினர் முதலில் நன்கு புரிந்தகொள்ளட்டும் இத்தோடு தாம் விரிக்கும் வலையில் முஸ்லிம் மக்கள் விழுந்து விடமாட்டார்கள் என்பதையும் படையினர் நன்கு தெரிந்து கொள்ளட்டும்.

ஏனெனில் படையினர் சில நாட்களுக்கு முன்பு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்ங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஊதவுவதை விடுத்து அவர்களை ஒழித்துக்கட்ட படையினருடன் இணைய வேண்டும் என கேட்டுக்கொண்ட போது முஸ்லிம் சகோதரர்கள் இது குறித்து அலட்டிக்கொள்ளாது விட்டதன் மூலம் படையினருக்கு நல்ல பாடம் புகட்டிவிட்டனர்.

லட்சக்கணக்கான சிங்கள இளைஞர்கள் இருந்தும் என்ன பயன் அவர்கள் யுத்தத்தின் உண்மை நிலையை புரிந்துகொண்டு விட்டார்கள் இதனால் தான் சிங்கள இளைஞர்கள் படையில் சேர்கிறார்கள் இல்லை.

இந்நிலையிலே முஸ்லிம்களை வளைத்துப் பிடித்து யுத்தத்தில் பலியிட சிங்கள பேரின வாதம் திட்டம் தீட்டியுள்ளது இவ்வாறு முஸ்லிம் மக்களை ஒரு ஆபத்துக்குள் மாட்டிவிடுவதால் சிங்கள பேரின வாதத்திற்கு என்ன நட்டம். சிங்கள பேரினவாதத்தின் குறியெல்லாம் யுத்தத்தை எப்படியாவது வெல்ல வேண்டும் என்பதே இதனாலேயே பொறுக்கி எடுத்த சில புனைக்கதைகளைச் சொல்லி புலிகளை அழிப்பதற்கு முஸ்லிம் மக்களை கூட்டு சேருமாறு அழைக்கிறது.

இதன் உள் நோக்கம் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி சிங்கள பேரின வாதம் தனது காரியத்தில் வெல்வது என்ற தொடர்ச்சியான துரோகத்தைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்.

எனவே சிங்கள பேரினவாதத்தின் இவ்வாறான ஒவ்வொரு கபட நடவடிக்கைகளின் போதும் அன்பிற்குரிய முஸ்லிம் சகோதரர்கள் விழிப்புடனும் அவதானத்துடனும் இருக்க வேண்டும் என்று அத் துண்டுப்பிரசுரம் கூறுகின்றது.

## மட்டக்க..

நீக்கப்பட்டுள்ளார்கள் என நாம் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம். எனவே இனிமேலும் தயவுகூர்ந்து ரெலோ என்ற ரீதியில் பொதுமக்கள் இந்த நபர்களுடன் எந்தத் தொடர்பையும் வைக்க வேண்டாம் என பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

சீனித்தம்பி ரஞ்சன் (வரதன்)
சீனித்தம்பி உதயராஜ் (நிமலன்)
சீனித்தம்பி கோகுலராஜ் (கண்ணன்)
சவரிமுத்து மதிவதனன் (ரூபன்)

இந்த அறிக்கை ரெலோத் தலைவரும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அ. அடைக்கலநாதன் கையொப்பமிட்டுள்ளார்.

## யாழ்குடா....

கள்ளியங்காடு, நல்லூர், முத்திரைச்சந்தி, இருபாலை, திருநெல்வேலியில் ஒரு பகுதி ஆகிய இடங்களே சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அதிகாலை முதல் படையினர் மேற்கொண்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது படையினர் வீடுவீடாகச் சென்று அடையாள அட்டைகளை பரிசீலனை செய்து விசாரணைகளை மேற்கொண்டனர் இத்தேடுதலில் பல்கலைக்கழக மாணவர்களே அதிகளவில் துருவித் துருவிப் படையினரால் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தேடுதலில் எவரும் கைதுசெய்யப்பட்டதாக தெரியவரவில்லை.

## துப்பாக்கி........

கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரை எதிர்வரும் 17ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டு பிரேத பரிசோதனை அறிக்கை வரும்வரை மரணவிசாரணைத் தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## விரைவில் அதிபர் பதவிக்கான பரீட்சை முடிவுகள்

(மூதூர் அனஸ்)

வடக்குக்கிழக்கு மாகாணம் உட்பட நாடளாவியரீதியில் அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் பரீட்சைமுடிவுகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. என கல்விச்சேவை ஆணைக்குழுவினர் தெரிவித்ததாக அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த். மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்கள் எதிர்பார்த்து நீண்டகாலம் காத்திருந்த நிலையிலையிலே இம்முடிவுகள் வெளியிடப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.